# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.48 (L.W.78)

| | | | |
|---|---|---|---|
| Name | K.Karunanithi | Caste | Kallar |
| Father's Name | Krishnasamy | Calling | Inspector of Police (Retired) |
| Village | Vaddalur | Religion | - |
| Taluk | Orathanadu | Age | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.03.2025.

(A6 absent. His absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

**முதல் விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.35 P.M.**

நான் திருவாரூர் மாவட்டம் பரவாக்கோட்டை காவல் நிலையத்திலிருந்து 30.06.2024 அன்று காவல் ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 26.09.2015 முதல் 11.02.2016 வரை திருவண்ணாமலை மாவட்டம் சிபிசிஐடி காவல் ஆய்வாளராக பணியில் இருந்தேன். Additional Director General of Police Crime Branch CID, Chennai R.C.No.C5/010N18/2015 30.06.2015 அன்று காவல் துணை கண்காணிப்பாளருக்கு உதவியாக என்னை நியமித்தார்கள்.அந்த நியமன உத்தரவின் உண்மை நகல் அ.த.சா.ஆ.68. அசல் ஆவணம் இல்லாத நிலையில் உண்மை நகலை குறீயீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பில் ஆட்செபிக்கப்பட்டு அது குறியிடப்படுகிறது. அது குறித்து

வழக்கின் இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம். அதன் பின்னர் திருவண்ணாமலை சிபிசிஐடி துணைக் கண்காணிப்பாளர் வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் 01.07.2015 அன்று 22.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் கோவிந்தசாமி அவர்களை பார்த்து இந்த வழக்கின் ஆவணங்களை வாங்கி வரச்சொன்னார். சாட்சி சுதாரித்துக்கொண்டு அதை சொன்னவர் டிஎஸ்பி திரு. ஆனந்தகுமார் சிபிசிஐடி, வேலூர் ஆவார் என்று எடுத்துரைத்தார்.

நான் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் சென்று பொறுப்பு ஆய்வாளர் திரு.கோவிந்தசாமி அவர்களைப் பார்த்து டிஎஸ்பி வாங்கிவரச்சொன்ன வழக்கு தொடர்பான ஆவணங்களை கேட்டேன். 1.பொது நாட்குறிப்பேடு 9986501 to 9986601 வரை, 2.FIR Index Volume 1, 1/2015 to 160/201, 3. Sentry relief book 01.01.2015 8.00 to 11.00 hours and 01.07.2015 20.00 to 08.00 hours, 4. Rough duty roster from 15.06.2015 to 02.07.2015, 5. Duty roster January 2015 to June 2015, 6. Nominal Rolls from 1 to 19 01.07.2015, 7. Prisoner Search Register Page no. 1 to 69, 8. Community Service Register Page no. 1 to 106, 9. Inspector Daily diary January 2015 to April 2015, 10. Medical Memo Book Sl.No.C0670601 to C0670700, B8088701 to 8088800, 11. CD file Pallikonda P.S. Crime No. 140/2015 woman missing page no.1 to 54 xerox, 12. Hospital Intimation Register Page No.1 to 249/2015 ஆகிய ஆவணங்களை பள்ளிக்கொண்டா பொறுப்பு ஆய்வாளர் கோவிந்தசாமியிடமிருந்து தலைமை காவலர் பரத் பள்ளிக்கொண்டா காவல் நிலையம், மற்றும் பள்ளிக்கொண்டா தலைமை காவலர் நந்தகுமார் அவர்கள் முன்னிலையில் கைப்பற்றி காவல் துணைக்கண்காணிப்பாளர்

சிபிசிஐடி வேலூர் அவர்களிடம் ஒப்படைத்தேன். நான் கைப்பற்றிய மகஜர் ஏற்கனவே அ.த.சா.ஆ.26 ஆக குறியிடப்பட்டுள்ளது. அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன். கைப்பற்றப்பட்ட ஆவணம் அனைத்தும் ஏற்கனவே அ.த.சா.ஆ.27 முதல் 38 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த மகஜரில் என்னிடம் ஒப்படைத்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் திரு. கோவிந்தசாமி கையொப்பம் போட்டுள்ளார். 04.07.2016 என்னை சிபிசிஐடி டிஎஸ்பி சந்திரசேகர் விசாரித்தார்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கேள்வி: அ.த.சா.ஆ.68 உண்மை நகல்தான் என்றால் ?

பதில்: ஆமாம்.

கே: அதில் பெற்றதற்கான கையொப்பம் போட்டு பெற்றுள்ளேனா என்றால் ?

ப: இல்லை.

கே: அந்த உத்தரவில் என்னுடைய பணி என்ன என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ?

ப: The I.O., Asst. I.O. are instructed to collect the CD file and connected records of the above said case from the Superintendent of Police, Vellore District.

கே: 30.06.2015 அன்று இந்த ஆணையை பிறப்பிக்கும்போது நான் எங்கு பணியில் இருந்தேன் என்றால் ?

ப: சிபிசிஐடி திருவண்ணாமலை யூனிட்

கே: 30.06.2015–ல் என்னுடைய காவல் கண்காணிப்பாளர் யார் என்றால் ?

ப: அவர்கள் பெண் அதிகாரி. பெயர் ஞாபகமில்லை.

கே: திருவண்ணாமலை காவல் கண்காணிப்பாளர் என்னை வேலூருக்கு செல்ல ஏதேனும் எழுத்து மூல உத்தரவு கொடுத்தாரா என்றால் ?

ப: இல்லை. காரணம் வேலூர் வழக்கில் என்னை உதவி விசாரணை அதிகாரியாகத்தான் நியமித்தார்கள். எனவே திருவண்ணாமலை பணியை பார்த்துக்கொண்டு வேலூரில் இன்சார்ஜ் பணி செய்ய வேண்டிய சூழல் இருந்தது.

கே: கூடுதல் பணி பார்க்கும்படி வேற எந்த ஒரு எழுத்து மூல உத்தரவு கொடுத்தார்களா என்றால் ?

ப: இல்லை.

கே: திருவண்ணாமலையிலிருந்து நான் எப்போது வேலூருக்கு வந்தேன் என்றால் ?

ப: 01.07.2015 அன்று வேலூருக்கு FIR போடுவதற்காக வரச்சொன்னார்கள் வந்தேன். மீண்டும் சாட்சி சுதாகரித்துக்கொண்டு FIR போடப்போகிறோம் வாருங்கள் என்றார்கள் வந்தேன்.

கே: அதற்கு ஏதேனும் எழுத்து மூல உத்தரவு உள்ளதா என்றால் ?

ப: இல்லை. வாய்மொழி உத்தரவுதான்.

கே: வேலூரில் யாரிடம் ரிபோர்ட் செய்தேன் என்றால் ?

ப: திரு. ஆனந்தகுமார் டிஎஸ்பி புலன்விசாரணை அதிகாரி அவர்களிடம் செய்தேன்.

கே: IO ஆனந்தகுமார் அவரகள் எங்கு சென்று எவரிடம் ஆவணங்களை பெற்று வரவேண்டும் என்று ஏதேனும் எழுத்து மூலமாக உத்தரவு கொடுத்தார்களா என்றால் ?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.68 ஆணையை நான் படித்துள்ளேனா என்றால் ?

ப: படித்துள்ளேன்.

கே: ஆனந்தகுமார் எவரிடம் சென்று ஆவணங்களை கேட்க சொன்னார் என்றால் ?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் கோவிந்தசாமியிடம் கேட்க சொன்னார்.

கே: 30.06.2015 ஆணையில் வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம்தான் ஆவணங்களை பெறச்சொல்லி ஆணையிடப்பட்டுள்ளது ஏன் என்னை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு அனுப்புகிறீர்கள் என்று கேட்டீர்களா என்றால் ?

ப: இல்லை.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமியை எப்போது நான் பார்த்தேன் என்றால் ?

ப: 01.07.2015 அன்று 22.00 மணிக்கு பார்த்தேன். FIR போட்டதும் அன்றுதான்.

கே: 01.07.2015 அன்ற எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் ?

ப: இரவு 10.00 மணிக்கு பார்த்தேன்.

கே: என்னென்ன ஆவணங்கள் வேண்டும் என்று கோவிந்தசாமி ஆய்வாளரிடம் கேட்டேன் என்றால் ?

ப: எழுத்து மூலமாக கேட்டோம்.

கே: நான் கையெழுத்து போட்டு கடிதத்தை கொடுத்தேனா என்றால் ?

ப: நான்தான் கையெழுத்து போட்டேன்.

கே: அந்த கடிதத்தை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் ?

ப: இல்லை.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமி வேறு என்ன ஆவணங்களை கொடுத்ததாக சொன்னார் என்றால் ?

ப: நான் 12 ஆவணங்களை கேட்டேன். அவை அனைத்தையும் கொடுத்தார்.

கே: 01.07.2015 அன்று உதவி புலன் விசாரணை அதிகாரி என்ற நிலையில் அன்றைய தேதியில் ஆய்வாளர் திரு. கோவிந்தசாமியிடம் இந்த வழக்கு தொடர்பான வேறு ஏதாவது ஆவணங்களை வேறு எங்காவது அனுப்புனீர்களா என்று கேட்டீர்களா என்றால் ?

ப: கேட்டேன். எங்கும் எதையும் அனுப்பவில்லை என்று சொல்லிவிட்டார்.

கே: 01.07.2015 இந்த வழக்கு தொடர்பான மகஜரில் இல்லாத வேறு ஏதேனும் ஆவணங்களை கேட்டிர்காளா என்றால் ?

ப: இல்லை.

கே: 01.07.2015 அன்று இரவு 10.00 மணிக்குதான் திரு. கோவிந்தசாமியை சந்தித்து ஆவணங்களை கேட்டிருக்கிறீர்கள் அன்றைய தேதியில் பொது நாட்குறிப்பிலோ அல்லது தபால் ரிஜிஸ்டரிலேயோ பார்த்தீர்களா என்றால் ?

ப: இல்லை.

கே: 01.07.2015 இரவு 10.00 மணிக்கு நீங்கள் சென்றதையும் ஆவணங்கள் கேட்டதையும் அன்றைய பொது நாட்குறிப்பில் பதிந்தீர்களா ?

ப: அங்கு பொறுப்பில் இருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் பதிந்திருப்பார்.

கே: அ.த.சா.ஆ.27–ல் பக்க எண் B9986589–ல் 01.07.2015 தேதி இரவு 10.00 மணிக்கு தாங்கள் வந்ததாகவோ ஆவணங்கள் பெற்றதாகவோ ஏதேனும் பதிவு உள்ளதா என்றால் ?

ப: குறிப்பு ஏதும் இல்லை.

கே: 01.07.2015 ஆய்வாளர் கோவிந்தசாமியிடம் இந்த வழக்கு தொடர்பாக எத்தனை புகார் பெற்றீர்கள் என்று விசாரித்தேனா என்றால்?

ப: இல்லை.

கே: பார்வை மகஜரின் நகலை ஆய்வாளர் கோவிந்தசாமியிடம் 01.07.2015 அன்று இரவு 10.00 மணிக்கு மேல் கொடுத்தீர்களா என்றால்?

ப: கொடுத்தேன்.

கே: 30.06.2015 தேதியிட்ட ADGP Crime branch CID கொடுத்த ஆணையின்படி நடக்காமல் அதிகார வரம்பை மீறி தன்னிச்சையாக எதிரிகளை வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என்ற உள் நோக்கத்தோடு செயல்பட்டிருக்கிறேன் என்றால் ?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.26 ஐ யார் எழுதியது என்றால் ?

ப: என்னுடைய எழுத்தர் ஜெயசங்கர் தலைமை காவலர் எழுதினார். நான் சொல்ல சொல்ல அவர் எழுதினார்.

கே: என்னுடைய காவல் நிலையம் எது என்றால் ?

ப: திருவண்ணாமலை ஆகும்.

கே: திருவண்ணாமலை எழுத்தர் இல்லாமல் வேற யாரையோ பயன்படுத்தி உங்களுக்கு வேண்டியதுபோல் அ.த.சா.ஆ.26 ஐ எழுதியிருக்கிறர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: பல்வேறு ஆவணங்களை பார்வையிடாமல் கோவிந்தசாமி அவர்கள் செய்த குற்றச்செயலுக்கு துணை பிரிய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு தொடர்புடைய ஆவணங்களை பெறாமல் மறைத்து உண்மைக்கு புறம்பான செய்திகளை கொண்டு இந்த அ.த.சா.ஆ.26 தயாரிக்கப்பட்டது என்றால் ?

ப: சரியல்ல.

கே: ஒரு மகஜரில் கைப்பற்றப்பட்ட Hospital Intimation Register–ஐ புலன் விசாரணை செய்யும் அதிகாரிக்கு உதவியாக நியமிக்கப்பட்ட நீங்கள் அந்த ஆவணத்தை வாங்கி பார்த்தீர்களா என்றால் ?

ப: பார்த்துதான் புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேன்.

கே: 14.06.2015 முதல் 21.06.2015 வரை இந்த வழக்கில் மரணமடைந்ததாக சொல்லப்படும் ஷமீல் பாஷா என்பவர் குறித்து ஏதேனும் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட தகவல் (Intimation)உள்ளதா என்றால் ?

ப: எதுவும் இல்லை.

கே: பொதுவாக மருத்துவமனையில் தன்னை அடித்துவிட்டதாக சொல்லி உள்நோயாளியாக அனுமதிக்கும்போது மருத்தவமனையிலிருந்து உரிய காவல் நிலையத்திற்கு தகவல் வருமா என்றால் ?

ப: வரும்.

கே: மருத்துவமனையிலிருந்து பெறப்பட்டு அந்த தகவலை Hospital Intimation Register–ல் பதிவு செய்வார்கள் என்றால் ?

ப: சரிதான்.

கே: அ.த.சா.ஆ.30 ல் 16.06.2015 தேதியிட்ட பக்க எண் 5 ல் ஆய்வாளர், எஸ்எஸ்ஐ ஆகியோர் செம்மர எஸ்கார்டுக்கு சென்றதாக குறிப்புகள் உள்ளது என்றால் ?

ப: சரிதான். அந்த குறிப்பு எ.த.சா.ஆ.7.

கே: அ.த.சா.ஆ.35 ல் Inspector Daily Dairy–ல் மே 2015 மற்றும் ஜுன் 2015 தொடர்புடைய தகவல் எதுவும் இல்லை என்றால் ?

ப: சரிதான்.

கே: என்னுடைய அதிகாரத்தை மீறி எதிரிகளின் மீது பொய் வழக்கு தொடர வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு சில ஆவணங்களை மறைத்து சில ஆவணங்களை காட்டினால் எதிரிகளுக்கு பாதகமாகும் என்ற உள்நோக்கத்தோடு கோவிந்தசாமி அவர்கள் செய்த குற்றத்தை மறைத்து ஆவணங்களை மறைத்து சில ஆவணங்கள் தவிர்த்து உள்நோக்கத்தோடு மகஜர் தயார் செய்து கொடுத்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் மற்றும் 6ம் எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார். அனுமதியுடன் தொடர் குறுக்கு விசாரணை.

அ.த.சா.ஆ.68–ல் அந்த ஆவணம் தயாரித்த மாதம், வருடம் உள்ளது தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மகஜரில் மூல வழக்கின் குற்ற எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சிபிசிஐடி குற்ற எண் போட்டுள்ளோம். லோகல் போலீஸ் குற்ற எண் போடவில்லை.

கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய அனைத்து ஆவணங்களையும் படித்தேனா என்றால் வாங்கிக் கொடுத்துவிட்டேன். அதில் உள்ள விவரங்களை புலன் விசாரணை அதிகாரிதான் ஆய்வு செய்வார். ஆய்வாளராகிய நான் டெய்லி டைரியில் குறித்துள்ள விவரங்களை என்னை விசாரித்த விசாரணை அதிகாரி சந்திரசேகரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

காவல் நிலையத்தில் நான் சென்று பார்க்கும்பட்சத்தில் நான் ஒரு போலீஸ் அதிகாரியதாக இருப்பதால் அந்த நிலையத்தில் உள்ள போலீசாரையும் நான் விசாரிக்கலாம், போலீஸ் ஸ்டேண்டிங் ஆர்டர்படி அவர்களால் பராமரிக்கப்படுகின்ற பொது நாட்குறிப்பேடு அனைத்தையும் நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை.

அ.த.சா.ஆ.68–ல் பக்க எண் 3–ல் Sharmil Basha என்று உள்ளது என்றால் சரிதான். Police case dairy–ஐ நான் வாங்கவில்லை.

Police case dairy என்பது காவல் நிலையத்தில் நடந்த வழக்குகள் தொடர்பான விசாரணை விவரங்கள் என்றால் சரிதான். அந்த Police case dairy–ஐ இந்த மகஜரில் நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

நான் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு சென்றிருக்க முடியாது என்றும் மேலும் அங்கிருக்கும் கோவிந்தசாமி, நந்தகுமார், பரத் ஆகியோர் முன்னிலையில் அங்கு கைப்பற்றியதாக சொல்லப்படும் ஆவணங்களை கண்டிப்பாக கைப்பற்றியிருக்க முடியாது ஆனால் நான் காவல் நிலையம் சென்று மகஜரை கைப்பற்றுவதாக சொல்வது பொய்யானது என்றால் சரியல்ல.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சென்று பார்த்துவிட்டு நானும் புலன் விசாரணை அதிகாரி ஆனந்தகுமாரும் அமர்ந்து எழுதிக்கொண்ட குறிப்புகள் இவை என்றாலும் நான் கைப்பற்றியதாக சொல்வது பொய்யான வாக்குமூலம் என்றால் சரியல்ல. மேலும் உயர் அதிகாரிகளுக்கு பயந்து தயாரிக்கப்பட்டு ஜோடிக்கப்பட்ட ஆவணங்கள் இவை என்றாலும் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை**

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.12 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.03.04 17:37:46 +0530